# தவக்காலம் 2ஆம் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

"இயேசுவின் உருமாற்றத்தை உள்ளத்தால் உணர்ந்து, அவருக்கு செவிசாய்க்க இன்றைய தவக்காலம் இரண்டாம் ஞாயிறு திருப்பலிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். இறைவனின் ஒளி நம்மையும் ஒளிர்விக்க இப்பலியில் வேண்டுவோம். இயேசுவின் உருமாற்றம் நம் உள்ளத்தை ஒளிர்விக்கும் போது நம் ஒளி பிறர் முன் ஒளிரும்.

நடை உடையின் மாற்றம் நாகரீகம் ஆனது;

நன்னடத்தையின் தோற்றம் மனிதநேயத்தை மலரச் செய்தது.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை

வாய்மையாற் காணப் படும்.

என்றார் வள்ளுவர். அகத்தை தூய்மையாக்கும் அழகிய உருவம் பெறுவோம்.

இன்றைய முதல் வாசகத்தில், "உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; உனக்கு ஆசி வழங்குவேன்" என்று ஆண்டவர் ஆபிராமுக்கு ஆசி வழங்கி, கானா நாட்டிற்குச் செல்ல கட்டளையிடுவதைக் காண்கின்றோம். இறைவன் மேல் வைத்த விசுவாசமே ஆபிரகாமுக்கு இத்தகைய ஆசீரைப் பெற்றுத் தந்தது.

இறைவனின் வார்த்தைகளை விசுவதித்து, துளியேனும் ஐயப்பாடு இன்றி பின்பற்றிய ஆபிரகாம், விசுவாசத்தின் தந்தையாக உயர்ந்து நிற்கிறார். நாமும் விசுவாசத்தில் நன்கு உறுதி பெற்று இறையாசீர் பெற முனைவோம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசுவின் உருமாற்ற நிகழ்வை எடுத்துக் கூறுகின்றார் புனித மத்தேயு. உருமாற்றம் என்பது உருவ மாற்றம் அல்ல; மாறாக இறை ஒளியை உள்ளம் உணரும் போது முகத்தில் தெரியும் பிரகாசமே உருமாற்றம். அகத்தின் ஒளியால் புறத்தின் குறைகளை களையப்படும் போது உருமாற்றம் உணரப்படுகிறது.

இயேசு பாடுகளை அறிந்தும், அதை ஏற்கவே ஆயத்தமாகிறார். சீடர்கள் அறியாத போதும், உணராத போதும் தம் வாழ்வை ஒப்படைத்து, நம்மை பாவம் எனும் இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் செல்கின்றார். அவரது ஒளியில் இனிதே நடப்போம். பிறருக்கும் இனிமையாய் நடப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. ‘என் அன்பார்ந்த மைந்தர் இவரே’ என்றவரே எம் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்தும் திரு அவைத் தலைவர், பணியாளர்கள் இயேசு தம்மையே தாழ்த்தி, ஆடம்பரமற்ற நற்செய்தி போதனையில் ஈடுபட்டது போல, திரு அவையின் ஊழியர்கள் அன்பின் நற்செய்தியை அனைவருக்கும் அறிவிக்கும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆண்டவரின் செயல்கள் எல்லாம் நம்பிக்கைக்கு உரியவை என்பதை விசுவசிக்கின்றோம் இறைவா!

எங்கள் நாட்டின் தலைநகர் அமைதியின்றி போராட்டம் அரங்கேறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், நாட்டை ஆள்வோர் அலட்சிய போக்கைக் கொண்டிராமல், மக்கள் அமைதியுடன் வாழவே சட்டம் என்பதை உணர்ந்து, தீர்க்க வேண்டிய, சரிப்படுத்த வேண்டிய பிரச்சனைகளை கண்கொண்டு பார்க்கவும், போராட்டத்தை தூண்டாமல் தீர்க்கவும், நாட்டின் பொருளாதாரம் மேம்பட தேவையான திட்டங்களை செயல்படுத்த நல்லறிவு வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கம் மிகுந்த தெய்வமே இறைவா!

இத்தவக்காலத்தில் உடலை வருத்துவது மட்டும் நோன்பு அல்ல; வறியவர்களையும் வருந்துவோரையும் காணும்போது கைகள் உதவி செய்ய விரைய வேண்டும் என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ளவும், அன்பினால் அடுத்திருப்பவரோடு நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளவும், மனமாற்றம் பெற்று வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. நன்மையால் நிரப்பும் தெய்வமே எம் இறைவா!

எம் பகுதி வாழ் மக்களை ஆசீர்வதியும். வேளாண்மை சிறந்து பெருகவும், தொழில் முன்னேற்றம் அடையவும், குடும்பங்களில் அமைதியும் அன்பும் மகிழ்ச்சியும் பெருகவும், தேர்வைச் சந்திக்கும் மாணவர்கள் நல்ல உடல் நலத்துடனும் ஞானத்துடனும் தேர்வு எழுதி வெற்றி பெறவும், வேலைவாய்ப்பை எதிர்நோக்கியிருக்கும் அன்பர்கள் உம் அருளால் பெற்றுக் கொள்ளவும், திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உம் அருட்கொடைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com